2000 மே 11]

பணிமனை உருவாக்க இயலாது. திண்டுக்கல்லில் இருந்து 41.8 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள குஜிலியம்பாறைக்கு 46 தனி நடைகளின் மூலமாக, புறநகர்ப் பேருந்துகளின் மூலமாகப் பேருந்து வசதிகள் கிடைக்கப் பெறுகின்றன. ஆகவே, தனியாகப் பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 589, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

589—

பேருந்து வசதி

***30817—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்திலிருந்து உளுந்தூர்பேட்டைக்கும், நெய்வேலி நகரியத்திற்கும், பள்ளி, கல்லூரி நேரங்களில் மகளிர் மற்றும் பள்ளி மாணவர்களுக்கான பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்திலிருந்து உளுந்தூர்பேட்டைக்கு 5 நகரப் பேருந்துகள் நாளொன்றுக்கு 76 நடைகளுடனும், விருத்தாசலம்—நெய்வேலி வழித்தடத்தில் 5 நகரப் பேருந்துகள் 44 நடைகளுடனும் விழுப்புரம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் உள்ள மாணவர்கள் இப்பேருந்து இயக்கத்தினால் பயன்பெறுகின்றனர். இப்பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது. எனவே, மகளிர் மற்றும் பள்ளி மாணவர்களுக்காகத் தனியே பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

முற்பகல் 10-00

திரு. குழந்தை தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விருத்தாசலத்திலிருந்து உளுந்தூர்பேட்டைக்கும், நெய்வேலியிலிருந்து விருத்தாசலத்திற்கும்

[2000 மே 11

இப்போது அரசின் மூலமாக இயக்கப்படுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கையைத் தெரிவித்தார்கள். அப்படி இயக்கப்படுவது உண்மைதான். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் கேட்க விரும்புவது, காலை நேரங்களிலே உளுந்தூர்பேட்டையிலிருந்து விருத்தாசலத்திற்குக் கல்லூரி மாணவர்கள், மாணவிகள் வருகிறார்கள். அதேபோன்று, நெய்வேலியிலிருந்து கல்லூரி மாணவர்கள், மாணவிகள் விருத்தாசலத்திற்கு வருகிறார்கள். வேப்பூரிலிருந்தும், மற்ற பகுதிகளிலிருந்தும், விருத்தாசலம் மையப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் கல்லூரிக்கு வருகிறார்கள். அதேபோன்று, விருத்தாசலத்திலிருந்து நெய்வேலியிலே சிறந்த பள்ளிகள் இருக்கின்ற காரணத்தினால், மாணவ, மாணவிகள் அங்கும் செல்கிறார்கள். இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு கல்லூரி தொடங்கப்படுகின்ற நேரத்திற்கு முன்பாகச் செல்கின்ற, அந்தப் பேருந்துகளைத் தனியாக மகளிருக்காகவும், கல்லூரி மாணவ, மாணவிகளுக்காகவும், பள்ளி மாணவர்களுக்காகவும் ஒதுக்கினால் சிறப்பாக இருக்கும்; மாணவ, மாணவிகளுக்கு இடர்ப்பாடுகள் இல்லாமல் இருக்கும். அந்த வகையிலே அரசுப் பேருந்துகளை, தனியான உத்தரவு மூலம் இயக்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கிராமப்புறத்திலே இருக்கின்ற மாணவர்கள் நகர்ப்புறங்களுக்குச் சென்று படிப்பதற்காகத் தான் இலவச பஸ் பாஸே கொடுத்தார்கள். விருத்தாசலத்திலே உள்ள வசதியுள்ள மாணவர்கள், மற்றொரு வசதியான நகரத்திற்குச் சென்று, நெய்வேலியிலே இருக்கின்ற வசதியான பள்ளிக்கூடத்திலே படிப்பதற்கு இந்தப் பேருந்துகளிலே இலவச பஸ் பாஸ் வழங்கப்படவில்லை. ஆகையால், அவர்களுக்காகத் தனிப் பேருந்துகள் கோருவது சரியாக இருக்காது. விருத்தாசலத்திலே இருக்கிற பள்ளிகள் எல்லாம் நலிவடைந்து விடக்கூடிய சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உருவாக்கக் கூடாது. ஆகவே, பெரும்பாலும் அந்தப் பகுதிகளிலே இயக்கப்படுகிற பேருந்துகளில் இலவச பஸ் பாஸ் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்குப் போதுமான பேருந்து வசதிகள் இருக்கின்ற காரணத்தினால் தனியாகப் பேருந்துகள் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *590*, திரு. கு. மனோகரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.